## பிரதம நீதியரசர் சுகவீனம்; விசாரணை தள்ளிவைப்பு!

உயர் நீதிமன்றத்தில் நடைபெற்றுவந்த ட்ரயல்—அற்—பார் தீர்ப்பு அப்பீல் விசாரணை பிரதம நீதியரசர் திரு. விக்டர் தென்னக்கூனுக்கு ஏற்பட்ட திடீர் சுகவீனம் காரணமாக ஒருவாரம் பின்போடப் பட்டுள்ளது. இவ்விசாரணை 19-10-76ல் மீண்டும் ஆரம்பமாகவிருந்தது.


# சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 35.

வள்ளுவர் ஆண்டு 2007 | ஐப்பசி 4 | ஷவ்வால் 25 | (20-10-76) புதன் புத்தகம் 30 | இதழ் 52


# "சபையில் அளித்த வாக்குறுதிகளுக்கு முரணாக மந்திரிகள் செயற்படுவதுண்டு"

—ஜீ. ஜீ.

## "உமது கருத்தை ஏற்கிறேம் ஏனெனில் நீரும் ஒரு மாஜி மந்திரி"

—பிரதம நீதியரசர்

## "அவ்வாருக நான் நடந்தது கிடையாது"

—ஜீ. ஜீ.

## அப்பீல் விசாரணையில் தொடர்ந்து வாதம்!

அவசரகாலச் சட்டம் செல்லுபடியற்றது என்ற ட்ரயல்—அற்—பார் மேல் நீதிமன்ற நீதிபதிகளின் தீர்ப்புக்கு எதிராக சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆட்சேபனை மனுக்கள் மீதான விசாரணை ஐந்து நீதியரசர்கள் முன்னிலையில் தொடர்ந்து நடைபெறுகிறது. சட்டமா அதிபர் திரு. சிவா பசுபதியின் வாதங்களுக்குப் பதிலளித்து திரு. அமிர்தலிங்கத்தின் சார்பில் ஆஜராகும் சட்டத்தரணிகளில் ஒருவரான திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் தமது சட்ட வாதத்தை கடந்த வெள்ளிக்கிழமை (15-10-76) ஆரம்பித்தார்.

கடந்த 15-10-76 காலை தனது சட்டவாதத்தை திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தொடங்கினர். அவர் பேசுகையில் கூறியதாவது:



"1972ம் ஆண்டு மே மாதம் நாட்டிலிருந்த நிலைமைபற்றி இங்கு குறிப்பிடுவது தவருனதல்ல. சட்டமா அதிபர் தன்னுடைய வாதத்தை நிகழ்த்துகையில், ஒரு "குடையின்" கீழ் அல்லது வேறுவிதமாக நான் அதைச்சொல்வதானல் அவசரகால நிலைமை என்ற இருண்ட மேகங்களின் கீழ் தான் அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது என்ற உண்மையை குறிப்பிட்டுக் காட்டியிருக்கிருர். அரசியல் நிர்ணய சபை அரசியலமைப்புத் திட்டத்தை தயாரித்து முடித்த மறுநிமிடமே அவசரகாலச் சட்டம் இல்லாதிருந்தால் என்ன நடந்திருக்கும் என்று கற்பனை செய்துபார்க்கும்படி ஒருவரிடம் கேட்கின்ற முறையில், சட்டமா அதிபர் இங்கு வாதம் நிகழ்த்திஞர். இதற்கு என்னுடைய பதில் என்னவென்ருல் — அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை திறமையுடன் எடுப்பதற்கு சகல அதிகார சக்தியையும் தனது கையில் வைத்துக்கொண்டிருந்தது என்பதுதான்.

பொதுஜன பாதுகாப்புச் சட்டம் எந்தவித மாற்றத்

—4-ம் பக்கம் பார்க்க



திருகோணமலையை அடுத்துள்ள பனிக்கட்டி முறிப்பு என்ற தமிழ்க் கிராமத்தின் பெயர் இன்றைய சிங்கள ஏகாதிபத்திய — காலனித்துவ ஆட்சியின் கீழ் பனிக்கட்டியாவ' என்று சிங்களப் பெயராக மாற்றியமைக்கப் பட்டுள்ளது. மேலேயுள்ள படம் ஆங்கிலேயர் இந் நாட்டை ஆண்டபோதுகூட பனிக்கட்டி முறிப்பு என்ற தமிழ்ப் பெயரே அக்கிராமத்துக்கு வழங்கிவந்ததை எடுத்துக்காட்டுகிறது. எட்வேட் மன்னர் காலத்தில் பனிக்கட்டி முறிப்பு கிராம சபைக்கு கொடுக்கப்பட்டிருந்த 'சீலே' மேலே காணப் படுவது. அதில் பனிக்கட்டி முறிப்பு என்றே ஆங்கிலத்தில் பொறிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். ஆங்கிலேய ஏகாதிபத்தியம் செய்யத் துணியாத தமிழின ஒழிப்பை—தமிழ்ஈழ ஆக்கிரமிப்பை சிங்கள ஏகாதிபத்தியம் இன்று செய்வதற்கு இது ஓர் தகுந்த எடுத்துக் காட்டாகும்.

## "ஐ. நா. சபையில் தமிழ் ஈழமும் இடம்பெறும் காலம் நெருங்கிக்கொண்டிருக்கிறது"

### அமெரிக்க பல்கலைக் கழகத்தில் டாக்டர் ஜனர்த்தனம் முழக்கம்!

"ஐக்கிய நாடுகள் மன்றத்தில் ஈழத்தமிழர் பிரச்சினை விரைவில் கொண்டு செல்லப்படும். அந்நேரம் அமெரிக்கத் தமிழர்கள் தங்கள் முழுமையான ஆதரவை அளித்து எழுச்சியுடன் இயங்கவேண்டும்!"

அமெரிக்காவிலுள்ள நியூயார்க் தமிழ்ச் சங்கத்தினா தமக்கு அளித்த வரவேற்பு விழாவில் பேசிய உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் டாக்டர் இரா. ஜனர்த்தனம் எம். ஏ. இவ்வாறு கேட்டுக்கொண்டார். இவ்வரவேற்புக் கூட்டம் ஆகஸ்ட் 28ம் திகதியன்று கொலம்பியா பல்கலைக்கழகத்தின் 'ஹாரஸ்' மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் திரு. ஜனர்த்தனம் மேலும் பேசுகையில், "ஐக்கிய நாடுகள் மன்றத்தில் தமிழ் ஈழநாடும் இடம்பெறும் காலம் நெருங்கிக்கொண்டிருக்கிறது" என்றுர். இக்கூட்டம் டாக்டர் முத்துசாமி அவர்கள் தலைமையில். நடைபெற்றது. தமிழ்ச் சங்கத்தின் தலைவர் டாக்டர் குமரேசன் ஏற்பாடுகளை மேற்பார்வை செய்து கூட்டத்திற் கலந்து

—4-ம் பக்கம் பார்க்க

## அவசரகால பிரகடனத்தில் புதிய அரசியலமைப்புககமைய மாற்றம் செய்திருக்கத்தான் வேண்டும்!"

—பிரதம நீதியரசர்


பிரதம நீதியரசர்: அவசரகால நிலைமை பிரகடனம் செய்யும் விஷயத்தில் பலதரப்பட்ட வியாக்கியானங்கள் அளிக்கப்பட்டு இருப்பதனல், நாட்டை எதிர்நோக்கியிருக்கும் குழப்பமான சூழ்நிலையில், பிரதமரும் ஜனதிபதியும் ஒரு இடத்தில் அமர்ந்து அதுபற்றி அல்லவா சிந்தித்துக்கொண்டிருக்க வேண்டும்? இது சரியாக, ரோம், தீப்பற்றி எரிகையில் நீரோ மன்னன் பிடில் வாசித்துக் கொண்டிருப்பதாகாதா?

பிரதம நீதியரசர்: அவசரகாலச் சட்டம் பற்றி இரண்டு அரசியலமைப்புத்திட்டங்களுக்கு இடையில்சிறுமாற்றங்கள் இருப்பதனல், அவசரகாலப் பிரகடனத்திலும் சிறு மாற்றங்களை செய்திருக்கத்தானே வேண்டும்?

சிவாபசுவதி: அதுபற்றி சட்டவரைஞர் அபிப்போசனை செய்து புதிய அரசியலமைப்பின் கீழ் அவசரகால நிலை பிரகடனத்தின் வாக்கியங்களில் மாற்றம்செய்யத் தேவையில்லையென்று தீர்மானித்தார்.

பிரதமநீதியரசர்: இருந்தாலும், அவசரகால நிலை பிரகடனத்தில் புதிய அரசியலமைப்பின் கீழ் சிறு மாற்றத்தை செய்திருக்கத்தான்வேண்டும்!"

(15-10-76 உயர் நீதி மன்ற நிகழ்ச்சியின்போது)



சந்திரசேகரா கொலை முயற்சி வழக்கின் சந்தேக நபர் 'மூல்லை!'

—இவர்தான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினத்தை விழுங்கிவரும் சிங்களத்துக்கு கலைமகள் விழாக்களில் என்னவேலை!

## அடிமை மனோபாவத்தை தமிழர்களே கைவிடுங்கள்!

கொழும்பிலுள்ள திணைக்களங்கள் பல இந்த வருடமும் கலைமகள் விழாவை சிறப்பாகக்கொண்டாடின. இந்து சமயக்கலாசாரத்தின் மலர்ச்சிக்கும் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும் இது மிகவும் உதவுமென்பதில் ஐயமில்லை. ஆனால் இவ்விழாவை சில போலித் தமிழர்கள் தங்களின் அடிமைப் புத்தியை சிங்கள எசமானர்களுக்குக் காட்டுவதற்குப் பயன்படுத்திக்கொண்டதைக் கண்டபோது நாம் மிகவும் வெட்கமும் துக்கமும் அடைந்தோம்.

தங்கள் சிங்கள எசமானர்களை சிங்களத்தில் விளம்பரப்படுத்தி அவர்களின் கடைக்கண்ணின் கருணை பெறுவதோடு "நீங்கள் எது செய்தாலும் நாங்கள் உங்கள் அடிமைகள்" என்பதையும் விளம்பரப்படுத்திக் கொண்டார்கள்;முற்போக்குவாதிகள் என்று தமக்குத் தாமே படடம் சூட்டிக் கொள்ளும் சில போலித் தமிழர்கள்.

திணைக்களங்களின் சுற்றறிக்கைகள் யாவும் சிங்களத்தில்; அங்கு நடக்கும் வைபவங்கள் யாவிற்கும் சிங்களத்தில் மட்டும் விளம்பரம்; திணைக்களங்களில் தாபனப்பகுதி, நிர்வாகப் பகுதி என்பனவற்றில் எல்லாம் சிங்களம் மட்டும் தெரிந்த ஊழியர்கள் மாத்திரம் திட்டமிடப்பட்டு வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள். இவர்களிடம் தமிழ் ஊழியர்கள் சென்றால் சிங்களத்தில் மட்டும் கதைக்கவேண்டும், தெரியாமல் தமிழிலோ ஆங்கிலத்திலோ கதைத்தால்போச்சு; பின்பு இத் தமிழ் ஊழியர்கள் விடயமான சம்பள உயர்வுப் பத்திரம் உத்தியோக உறுதிப்படுத்தல் பத்திரங்கள் யாவும் அவர்களின் மேசையை விட்டே அசையாது.

இச்சிங்கள ஊழியர்கள் சிங்களத்தை தவிர்ந்த வேறு மொழியில் பேசுவதை காணவே பொறுக்கமாட்டார்கள். நாம் ஏதோ அவர்களின் அடிமை எனவும் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் கதைத்தால் நமது அடிமை ஏதோ வேறுமொழியில் பேசுகிறான் என்று துவேசத்துடன் பார்க்கிறார்கள்.

இவ்வளவும் நடந்தும் இன்னும் சிங்களம் மட்டும் சரிவர அமுல் நடத்தப்படவில்லை என்று மந்தி(ரி)களிடம் சென்று முறையிடுகிறார்கள். ஏன்? தமிழன் ஏதோ அனுபவிக்கும் அற்பசொற்ப சலுகைகளைக்கூட அனுபவிக்கக்கூடாது என்ற நோக்கத்தில் இந்த சிங்கள ஊழியர்கள் இனத்துவேசத்தையும் தாம் ஆளப்பிறந்தவன் என்று அறுதியிட்டுக் காட்டும் இந்நிலையில் நாம் இன ஐக்கியம் பேசி நமது கலைமகள் விழாவுக்கு சிங்களத்திலும் விளம்பரப்படுத்துவது நம்முடைய அடிமைப் புதத்தியை காட்டுவதாகத் தான் அமையும்.

ஆகையினால் தொழிற் திணைக்களம் கணக்காய்வுத் திணைக்களம் கல்வித் திணைக்களம்போன்று சிங்களத்திலும் இவ்விழாவிற்குவிளம்பரப்படுத்திய திணைக்களங்களின் தமிழ் ஊழியரைக் கேட்கின்றோம் வருங்காலத்தில் இவ்விழாக்களுக்கு தமிழில் மாத்திரம் விளம்பரப் படுத்துங்கள் — பிறமொழி பேசுபவர்கள் வரவேண்டுமென்று விரும்பினால் ஆங்கிலத்திலும் விளம்பரப்படுத்துங்கள். நமது கலை கலாச்சாரத்தை ரசிக்க வருபவர்கள் முற்காலங்களில் நாம் ஆங்கிலத்தில் விளம்பரப் படுத்தியபோதும் வந்தார்கள் இனிமேலும் வருவார்கள். சிங்களத்திலும் விளம்பரப்படுத்தி நாம் உங்களுக்கு அடிமைகள் என்று பட்டை எழுதி ஒட்டாதீர்கள் என்று தமிழ்த்தாயின் பேரால் பணிவோடு கேட்கின்றோம்,

—வல்வையன்

## காவடி நேர்த்திக்கடன்

பட்டிருப்புத்தொகுதியைச்சேர்ந்த குருமண்வெளி மாரியம்மன் கோவிலில், சிறையிலிருக்கும்தமிழ் இளைஞர்களின் நல்வாழ்விற்காக காவடி நேர்த்திக்கடன் ஒன்று நடத்தப்பெற்றது.

குருமண்வெளி தமிழ் இளைஞர் பேரவைக் கிளையினரால் ஏற்பாடு செய்யப்பெற்ற காவடி வைபவம் 9-10-76 சனிக்கிழமை இரவு 8மணியளவில் இடம்பெற்றது. நாகதப்பிரான் கோவிலில்இருந்து ஆரமபமானஇக் காவடி நிகழ்ச்சியில் பலர் பக்தி சிரத்தையோடு காவடி எடுத்துச் சென்றனர் த. இ. பே. தலைவர் திரு. பொ. துரைராசா தலைமையில் பல நூற்றுக்கணக்கான மக்கள் இவ்வைபவத்தில் கலந்து காராக்கிருகத்தில் வாடிக்கொண்டிருக்கும் தமிழ் இளைஞர்கட்காகப் பிரார்த்தனை செய்தனர்.

## கொழும்பில் சிலப்பதிகார விழா!

இலங்கை அறிவு இயக்கம், அடுத்த மாதம் நவம்பர் ஏழாந்திகதி கொழும்பில் 'சிலம்பு'க்கு ஒரு விழா எடுக்கின்றது. தமிழில் உருவான முதற் காப்பியமும், ஒரேயொரு முத்தமிழ்க் காப்பியமும் ஆகிய சிலப்பதிகாரத்தை இலக்கிய ஆர்வலர்கள் அறியவும், ஆராயவும், நயக்கவும், வியக்கவும் இவ்விழா வாய்ப்பளிக்கும். முழுநாள் நிகழ்ச்சியாக அமையும் இந்த விழாவில் சிறந்த பல அறிஞர்களும் கலைஞர்களும் பங்குபற்றுகிறார்கள். பட்டிமன்றம், பேருரைகள், சிலப்பதிகாரத்தைத் தழுவிய ஆடல்பாடல் ஆகியவை இடம்பெறுகின்றன.

## சிங்களப் படங்களில் தமிழர் அவமதிப்பு!

சிங்களபடத் தயாரிப்பாளர்கள் எமது தமிழ் சமூகத்தை எந்தநிலையில் வைத்திருக்கிறார்கள் என்பதை அவர்களது திரைப்படங்களைப் பார்ப்பவர்களுக்கு புரியும். அவற்றைப் பார்க்கும்போது சொல்லொணாத்துயர் ஏற்படுகிறது. அவர்களது பெரும்பான்மையான திரைப்படங்களில் வீட்டு வேலையாள், தோட்டக்காரன், சமையல்காரி போன்ற பாத்திரங்களுக்கு தமிழரை புகுத்தியிருக்கிறார்கள். இப்பாத்திரத்தில் வரும் நடிகரோ, நடிகையோ தமிழரல்ல ஆனால், படத்தில் பாத்திரம் பெயர்களாக வேலு, லெச்சுமி என்று அழைக்கிறார்கள்.

சிங்கள சமுதாயத்தின் எதிர்கால சிறார்கள் தங்கள் திரைப்படங்களைப் பார்க்கும்போது தமிழர்கள் இப்படித்தான் வாழ்ந்தார்கள் அல்லது இபபடித்தான் வாழவேண்டும் என்ற தாழ்வு மனப்பான்மையும்; எங்கள் சமுதாயத்தைப்பற்றி இழிவான எண்ணங்களும் அவர்களுக்கு ஏற்படவேண்டும் என்ற நோக்கில் சிங்களப் படத் தயாரிப்பாளர்கள் திரைப்படங்களைதயாரிப்பது மிக வருந்தத்தக்கதுடன், கண்டனத்திற்கும் உரியதாகும். அண்மையில வெளிவந்த நியூவேவ் படமான 'துஹலு மலக்' இல் இவை தெட்டத் தெளிவாக விளங்குகின்றன.

எமது தலைவர்கள் இது விடயத்தில் கவனம் செலுத்தி எமது சமூகத்தை இழிநிலைப்படுத்த சிங்களபட தயாரிப்பாளர்கள் திட்டமிட்டு செய்யும் இச்செயலை நிறுத்துவதற்கேற்ற ஒழுங்குகளை செய்யும் வண்ணம் கேட்டுக்கொள்கிறேன்.

—'அமுதா' திருமலை

## "வடக்கு கிழக்கு தமிழகத்தை ஒன்றிணைத்தவர் இராசமாணிக்கம்!"

### மண்டூரில் அமரர் நினைவுக் கூட்டம்!

"35 லட்சம் தமிழ்பேசும் மக்களுக்கும் தலைவராக இருந்தவர் அமரர் இராசமாணிக்கம் ஒரு குடும்பத்திற்கோ, ஒரு கிராமத்திற்கோ, ஒரு தொகுதிக்கோ சேவையாற்றுது ஈழம்வாழ் தமிழ்பேசும் மக்கள் அனைவருக்காகவும் பாடுபட்ட நேர்மையாளர் அவர்.தீர்க்க தரிசனமாக அவர் அன்று தமிழ்க் குடியேற்றங்களை ஏற்படுத்தியமையினாற்தான் இன்று ஓரளவிற்காவது பட்டிருப்பு தொகுதி சிங்களக் குடியேற்றங்களினின்றும் பாதுகாக்கப் பட்டிருக்கின்றது. இன்றைய ஒரு சிலரைப் போல மட்டக்களப்பான் — யாழ்ப்பாணத்தான் என்று பிரிவினைக்கோஷம் எழுப்பாது வடக்கிற்கும் கிழக்கிற்கும் ஒற்றுமைப் பாலம் அமைத்த பண்பாளர் அவர்".

பட்டிருப்புத்தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர் திரு. பூ. கணேசலிங்கம் அமரர் இராசமாணிக்கம் அவர்களின் சிரார்த்த தினக்கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பட்டிருப்புத்தொகுதி த. வி. கூட்டணியினரால் அமரர் திரு. சி. மூ. இராசமாணிக்கம் அவர்களின் இரண்டாவது சிரார்த்த தினத்தை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பெற்ற மாபெரும் இரங்கற்கூட்டம் 6-10-76 புதன் கிழமை பி. ப. 3மணியளவில் மண்டூர் முருகன் ஆலயவீதியில்இடம் பெற்றது.

திரு. ஏ. சிதம்பரப்பிள்ளையின் தலைமையில் இடம் பெற்ற இரங்கற் கூடடத்தினை, மண்டூர் முருகன் ஆலய வண்ணக்கர் திரு. வை. கந்தையா குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

த. வி. கூட்டணிக் கற்குடாத்தொகுதியைச்சேர்ந்த திரு. த. கோவிந்தசாமி இரங்கலுரை நிகழ்த்துகையில்; "தோன்றிற் புகழொடு தோன்றுக என்றார் வள்ளுவப்பெருந்தகை, புகழோடு தோன்றிமண்டூர்ப்பகுதியின் புகழை ஈழமெங்கும் விளங்க வைத்தவர் அமரர்அவர்கள்" அவர் ஆற்றிய சேவையினால் என்றுமே மக்கள் மனதில் நிலைத்திருந்தும் மறையாது வாழ்கின்றார். அவருக்கு நாம் செய்யும் கைம்மாறு, அவர் காட்டிய வழியில் — தமிழர் விடுதலைக்கூட்டணி காட்டுகின்ற பாதையில் செல்லுதலே" எனக்குறிப்பிட்டார்.

அவரைத்தொடர்ந்து உரையாற்றிய தமிழ் இளைஞர் பேரவையின் கற்குடாதொகுதி அமைப்பாளர் திரு. பா. சின்னத்துரை; மட்டக்களப்புப் பகுதியில் பல தலைவர்கள் பெயரளவில் இருந்தபோதிலும் பாராளுமன்ற உறுப்பினராக இல்லாதிருந்தும் தமிழுக்காக—தமிழினத்திற்காக தொண்டாற்றியவர் அமரர் இராசமாணிக்கம்" எனக் குறிப்பிட்டார்.

திருவாளர்கள் கோ. நாராயணபிள்ளை, அம்பிகாபதி, இரா. மதுரநாயகம், சி. முத்துப்பிள்ளை, வ. ஆ. தங்கவேலாயுதம், செல்வன் பா. தருமலிங்கம் ஆகியோரும் உரையாற்றினர். திரு. த. [illegible] நன்றியுரை வழங்கினார்.

## கறுக்காய் தீவில் அண்ணா பொதுப்பணி மன்றம்

"தமிழ் நாட்டில் இந்தி மொழி ஆதிக்கத்தை எதிர்த்துப்போராடித் தமிழருக்குத் தமிழ் உணர்வையும், தாய் நிலபபற்றையும் ஊட்டிய தோடல்லாமல் அவர்கள் மத்தியில் மலிந்துகிடந்த மூடநம்பிக்கைகளையும் கண்மூடித்தனமான கபோதிப் பழக்கவழக்கங்களையும் ஒழித்துக்கட்ட ஓயாது உழைத்த தன்னேரில்லா தலைவன் அறிஞர் அண்ணா" இவ்வாறு பூநகரிப் பகுதி இளைஞர்பேரவை அமைப்பாளர் திரு. சி. இராசா கடந்த சனியன்று கறுக்காய்த்தீவு அண்ணாபொதுப் பணிமன்றத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப்பேசுகையில் குறிப்பிட்டார்.

இவ்விழாவில் ஆசி ஆறுமுகம், ஈழவாணன் உட்பட இன்னும் பலர் கருத்துரை வழங்கினர்.

நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர்தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் இ. சிதம்பரநாதன் உபதலைவர் சி சின்னத்துரை, செயலாளர் மு. சிவபாதசுந்தரம் இணைச் செயலாவர் பொ. பரஞ்சோதி, தி. கணபதிப்பிள்ளை, பொருளாளர் வ. முருகமூர்த்தி. பத்துப்பேர் கொண்ட இயக்குநர் சபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## த. வி. கூட்டணி கொழும்புக் கிளை கூட்டம்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக் கிளையின் கூட்டமொன்று எதிர்வரும் 26-10-76 செவ்வாய்க் கிழமை மாலை 5 மணிக்கு பமபலப்பிட்டி லொறிஸ் வீதியிலுள்ள 51ம் இலக்க இல்லத்தில் நடைபெறும் இக்கூட்டத்தில் கொழும்பு, புத்தளம் தொகுதிகளில் கூட்டணி அமைப்பாளர்களை நியமிக்கும் விடயம் ஆராயப்படும். அமைப்புச் செயலாளர் திரு. சே. மா செல்லத்தம்பு பா. உ.வும் கலந்து கொள்ளுகிறார்.

## இன்றைய கருத்தரங்கு

கொழும்பில் நடைபெறும் தமிழர் விடுதலைக் கூட்டணி கொழும்புக் கிளையின் வாராந்தக் கருத்தரங்கு இன்று புதன்கிழமை மாலை 6 00 மணிக்கு பம்பலப்பிட்டி லொறிஸ்வீதியிலுள்ள 51ம் இலக்க இல்லத்தில் திரு. ஈழவேந்தன் தலைமையில் நடைபெறும். தமிழ்த் தலைவர்கள் உரையாற்றுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசசுந்தரத்தின் சர்வாதிகாரத்துக்கு எதிராக கூட்டுறவு ஊழியர் குமுறியெழுந்து போராடினர்!

## கம்யூனிஸ்ட் - சுதந்திரக்கட்சி தொழிற்சங்கங்கள் குத்துவெட்டு!

### வடபகுதி மக்கள் அன்றாட உணவுக்கு திண்டாட்டம்!

கடந்த 10 நாட்களாக வடபகுதிக் கூட்டுறவுத் தொழிலாளர்களில் ஒரு பகுதியினர் வேலை நிறுத்தமும், மறு பகுதியினர் வேலை செய்தும் தமது தொழிற்சங்க ஆதரவையும் பலத்தையும் பரீட்சித்துப் பார்க்கின்றனர். இவர்கள் பலப் பரீட்சையுள் சிக்குண்டு வடபகுதி மக்கள் இருதலைக் கொள்ளியாகக் கஷ்டப்படுகின்றனர்.

சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் பல தொழில் மணியாக யாழ்ப்பாணத்தில் இலங்குகின்றார். அவரது நிர்வாகத்தில் தொழிலாளரும், பொது மக்களும் படும் துயரம் எழுத்தில் அடங்கா. மந்திரிமாருக்குப் பூசை வைத்து அவர்களைத் தம்பக்கம் இழுத்தணைத்து ஏகசக்கரவர்த்தியாக விளங்கும் இராசசுந்தரம் கடந்த இரண்டாண்டு காலமாகக் கடைப்பிடித்துவரும் கொள்கைகளால் சங்கானை ப.நோ. கூட்டுறவுச் சங்கத்தில வேலை நிறுத்தம்; மின்தறி நிலையத்தில் வேலை நிறுத்தம்; மூளாய் ஆஸ்பத்திரியில் வேலை நிறுத்தம். இப்படி எங்கும் எதிலும் வேலைநிறுத்தம் ஏற்பட்டு வட்டுக்கோட்டைத் தொகுதி மக்கள் படும்பாடு பெரும்பாடக இருக்கின்றது.

பல ஸ்தாபனங்களில் தலையைப போட்டுடைத்து தலைமைப் பதவி வகிக்கும் இராசசுந்தரம் இதுவரை உருப்படியாக எவருக்கும் எதுவும் செய்துவிடவில்லை. அவர் அதிபராக இருக்கும் விக்ரோறியாக் கல்லூரியின் கல்வி அரோகராவாகி வருகின்றதாக பெற்றோர் குமுறுகின்றனர். தலைமைப் பதவி வகிக்கும் மூளாய் ஆஸ்பத்திரி பலமாத காலமாக பூட்டப்பட்டிருந்தது. பல தடவைகள் சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், மின்தறி நிலையம் வேலை நிறுத்தம் செய்தும் எதுவிதத்திலும் தொழிலாளர் கோரிக்கைகள் நிறைவேறவில்லை. இராசசுந்தரத்தின் அட்டகாசத்தைப் பொறுக்கமுடியாத தொழிலாளர் தமது கோரிக்கைகளைப்பெற வேலை நிறுத்தத்தில் இறங்கினர்.

இவ்வேலைநிறுத்தம் இன்று வடபகுதி முழுவதும் பரவியது. இதன் காரணமாக வேலை நிறுத்தம் இரண்டுபட்டிருக்கின்றது.

இலங்கைக்கூட்டுறவு ஊழியர் சம்மேளனம் நடாத்தும் இந்த வேலை நிறுத்தத்தை இதுவரை ஸ்ரீலங்கா சுதந்திர கூட்டுறவு ஊழியர் சங்கம் ஆதரிக்கவில்லை. இரு கூட்டுறவு ஊழியர் சங்கங்களும் அரசு ஆதரவாளர்களின் ஆதிக்கத்திலிருப்பது தான் வேடிக்கையாக இருக்கின்றது.

ஐ. மு. அரசில் அங்கம் வகிக்கும் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவு தொழிற்சங்கம் இவ்வேலை நிறுத்தத்திற்குப் பக்கபலமாக இருக்கின்றது. ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வடபிரதேச அமைப்பாளர்களின் ஆதிக்கத்திலுள்ள தொழிற்சங்கம் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவில்லை.

கடந்த வியாழனன்று இவ்வேலை நிறுத்தம் சம்பந்தமாக ஒரு மகாநாடு கூட்டப்பட்டது. சங்கானை ப. நோ. கூ. சங்கத் தலைவர் இராசசுந்தரத்தை மாற்றவேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இராசசுத்தரம் இதற்கு இம்மியும் இணங்கமுடியாதென்று பிடிவாதமாகநின்று மறுத்துவிட்டார். தற்போது நடந்துவரும் வேலைநிறுத்தம் சுமுகமாகத் தீர்க்கபபடவேண்டுமானல் இராசசுந்தரம் தலைவர் பதவியைத் துறக்கவேண்டுமென்பது பகிரங்க இரகசியம். ஆனல் எதுவரினும் பதவியை விடமுடியாதென்று அடித்துச் சொல்லிவிட்டார். இதற்கு பலவித எதிர்ப்புகள் தோன்றவே இராசசுந்தரம் வெளியேறிவிட்டார். இதற்குமுன் இராசசுந்தரத்தின் போக்குகளை மாநாட்டிலிருந்தோர் கண்டித்துப் பேசினர். எதற்கும் இராசசுந்தரம் அசந்து கொடுக்கவில்லை.

இன்று அரசு ஆதரவாளர்களே இராசசுந்தரம் ஒழிக! துரோகி இராசசுந்தரம்! என்றெல்லாம் கோஷம் எழுப்பி வருகிறார்கள். யாழ்ப்பாணம் ப. நோ. கூட்டுறவுச் சங்க சமாஜத்தில் பலவித சுவரொட்டிகள் காணப்படுகின்றன. அவை எல்லாம் இராசசுந்தரத்தின் கருங்காலித்தன்மையை அம்பலப்படுத்துகின்றன. வேலை நிறுத்தத்துக்குரிய 10 காரணங்கள் வருமாறு:—

1. 22 பணியாளர்கள் எதுவித விசாரணையுமின்றி வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

2. நிரந்தர பணியாளர்களின் கடமைகள் பறிக்கப்பட்டு சமயோசித பணியாளர்களிடம் ஒப்படைக்கப்டுள்ளன.

3. பணியாளர்களினல் தெரிவுசெய்யப்பட்ட இயக்குநர் சபை உறுப்பினர் நிர்வாகத்தால் கூட்டங்களில் பங்குபற்றுவது தடுக்கப்பட்டுள்ளது.

4. சங்க ஊழல்களைச் சுட்டிக்காட்டிய பணியாளர்கள் தண்டிக்கப்பட்டனர்.

5. வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட் பணியாளர்கள் பொறுப்பாக இருந்த கிளை நிலையங்கள் தவருன முறையில் உடைக்கப்பட்டு சமயோசித பணியாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

6. மிதமிஞ்சிய வகையில் அரசாங்க உத்தரவுக்கு மாருக சங்கத் தலைவருக்கு வேண்டியவர்களுக்கு உத்தியோகம் வழங்கப்பட்டுள்ளன.

7. சங்கப் பொதுச்சபை உறுப்பினர்சள் பலமுறைகளில்பொதுக்கூட்டம் கூடும்படி முறைப்படி கோரியும் கூட்டம் கூட்டப்படவில்லை;

8. சங்கத்தலைவரின் ஏதேச்சாதிகார நடவடிக்கைகளுக்குக் கூட்டுறவுத் திணைக்களமும் ஒத்துழைக்கின்றது.

9. கூட்டுறவு ஆக்கஉதவி ஆணையாளர்கள் முன்னிலையிலும் தொழிற்சங்க சம்மேளன உபதலைவர் திரு. வ. பொன்னம்பலம் அவர்கள் முன்னிலையிலும், சங்கத்தலைவர், பணியாளர்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

10. வேலை நிறுத்தத்திலீடுபட்ட பணியாளர்கள் பழிவாங்கப்பட்டனர்.

இந்த வேலை நிறுத்தம் தொடர்பாகப் பொதுமக்கள் உணவுக்குப் பெரிதும் திண்டாடுகின்றனர். கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் மழையில் வேலை நிறுத்தமும் தொடர்வதால் பாணுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அரிசி விலை ஏறிவருகின்றது. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆதிக்கத்திலுள்ள எரிபொருள் நிலையங்களும் மூடப்பட்டுள்ளதால் பெற்ரோல், ஒயில், டீசல் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. கமக்காரர் விவசாயத்திற்கு பெற்ரோல் ஒயில் கிடைக்காது கஷ்ட முறுகின்றனர்.

இத்தனைக்கும் காரணமாக இருக்கும் தனிமனிதன் இராசசுந்தரம் பதவியைச் சிக்கெனப் பிடித்திருக்க இன்னும் அரசாங்கத்தின் ஆதரவு இருக்கின்றதென்ருல் பொதுமக்கள் ஏமாளிகள்தான். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர்கள் சர்வவல்லமை படைத்த இராசசுந்தரத்திற்குப் பிச்சை வாங்கவேண்டும்.

வடபகுதி வேலைநிறுத்தம் இலங்கை முழுவதும் பரவும் என்று இங்கு கூட்டங்களில் பேசினர்கள். கொட்டடி ப. நோ. கூ. சங்கத்தினர் இம்மாதம் 15ந் திகதி கூட்டுறவாளர் பொது வேலை நிறுத்தம் நாடெங்கும் பரவும் என்ருர்கள். அதற்கான அறிவித்தல்களையும் ஆங்காங்கே வைத்திருந்தார்கள். ஆனல் இம்மாதம் 15ந் திகதியும் முடிந்துவிட்டது. நாடெங்கும் கூட்டுறவாளர் வேலை நிறுத்தம் வெறுங்கதையாகிவிட்டது. அவர்கள் எங்கே வேலைநிறுத்தம் செய்யப்போகின்ருர்கள். இவர்கள் தமிழர்கள். அவர்கள் சிங்களவர். இப்பேதம் வடபகுதி கூட்டுறவுத் தொழிலாளர்களுக்குத் தெரியவில்லையே!

— புத்தொளி.

### வேலை நிறுத்தம் தற்காலிகமாக ஒத்திவைப்பு!

சங்கானை ப. நோ. கூ. சங்க ஊழியர்களின் வேலை நிறுத்தம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# தமிழ்ஈழவிடுதலைக்குப் போராட 10,000 இளைஞர்கள் பயிற்சிபெற வேண்டும்!'

## வட்டுக்கோட்டையில் தளபதி நாவலர் முழக்கம்!

இம்மாதம் 7ம் திகதி வியாழக்கிழமை வட்டுக்கோட்டையில் தமிழ் இளைஞர் பேரவை புனரமைக்கப்பட்டது. வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழ் இளைஞர் பேரவையின் முழுநேர அமைப்பாளராக திரு. த. இராசலிங்கம் தமிழ் இளைஞர் பேரவை அமைப்பாளர்களாலும், தமிழர் விடுதலைக் கூட்டணியாலும் நியமிக்கப்பட்டார். வட்டுக்கோட்டை தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் திரு. ஆ. சேயோனின் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் பிரதம பேச்சாளர்காக நாவலர் அ. அமிர்தலிங்கமும், தமிழ் இளைஞர் பேரவை இடைக்கால அமைப்பாளரும், கொழும்புக்கிளைத் தலைவருமான திரு. ஆ. இரகுபதி பாலஸ்ரீதரனும் கலந்து கொண்டார்கள்.

திரு. ஆ. இரகுபதிபால ஸ்ரீதரன் தனது நீண்ட உரையின் போது இளைஞர் பேரவையின் அமைப்பு வேலைகளைப் பற்றியும், தமிழ் இளைஞரின் தலையாய கடமைகள் பற்றியும். குறிப்பிட்டார் அவர் தொடார்ந்து பேசுகையில், "இளைஞர்கள் உடனடியாக தமிழ் இளைஞர் பேரவையிற் சேர்ந்து உழைக்க வேண்டும். ஒரு கைவீசி சத்தமெழப்போவதில்லை. எனவே ஒரு அமைட்பு வேண்டும். அமைப்பொன்று இருந்தாற்தான் போராடமுடியும். தமிழனுக்கென்று ஒரு அமைப்பு இருசகக்கூடாது என்று இந்தச் சிங்கள அரசு தீர்மானித்துள்ளது. எனவே தான் தமிழர் கூட்டணி அமைப்பு வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டிருந்த கவிஞர் காசிஆனந்தனும், இளைஞர் பேரவை அமைப்பு வேலைகளில் அதிக கவனம் செலுத்திக்கொண்டிருந்தமாவை சேனதிராசாவும் யாரோ ஒருவர் எங்கோ கொலை செய்யப்பட்டதற்ாகக் கைது செய்யப்பட்டு நீதி விசாரணையின்றி சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் சிறைச்சாலைகளில் காணும் கனவும் அமைப்புகளைப் பற்றியதே! நாங்கள் அவர்களுக்குச் செய்யும் கைமாறு அமைப்புகளைப் பலப்படுத்துவதே! நீதி, நேர்மை, சத்தியத்தை அடித்தளமாக வைத்து நாங்கள் போராடுகிருேம். எனவே இறுதி வெற்றி எமதே! என்று கூறி முடித்தார்.

அடுத்துப்பேசிய தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலதிபர் நாவலர் அ. அமிர்தலிங்கம் தமது உணர்ச்சிகரமான உரையில், 'வீரத்தமிழ் இளைஞர்களே நமது உண்மையான செல்வங்கள்' என்றும் 'தமிழ் இளைஞர் பேரவை நிச்சயம் தமிழீழத்தைப் பெற்றுத்தரும்' என்றும் 'தமிழ் இளைஞர் பேரவையைப் பலப்படுத்துங்கள் [illegible] திற்குக் குறைந்தது பத்து இளைஞர்களையாவது தெரிந்தெடுத்து தொகுதிக்கு குறைந்தது ஆயிரம் சிறந்த வீரராவது இருக்கவேண்டும்' என்ருர். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், 'இளைஞர்களை இளைஞர் பேரவையில் சேர்ந்தவுடனேயே சிறைச்சாலைகளுக்குப் போகும்படியோ, இரத்தம் சிந்தும்படியோ நாங்கள் கேட்கவில்லை. உங்களால் இயன்றதைச் செய்யுங்கள் என்றுதான் நாம் சொல்கிருேம். எத்தனையோ விதங்களில் எமது விடுதலை இயக்கத்திற்கு மறைமுகமாக உதவிகள் செய்யலாம். அதைச் செய்யுங்கள். வெளிநாடுகளிலே விடுதலை இயக்கங்களிலே இளைஞர்கள் துணிந்து எத்தனையோ காரியங்கள் செய்கிருர்கள். தமிழீழத்திலும் அந்நிலை ஏற்படவேண்டும்' என்ருர். தமிழீழ தேசியகீதத்துடன் கருத்தரங்கு நிறைவுபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

## "சபையில் அளி...

—1-ம் பக்கத் தொடர்

துக்குமுள்ளாகாமல் அப்படியே செயற்படவேண்டிய நிலையொன்று உருவாகிவருவதாக உணரப்பட்டிருந்தால், அச்சட்டத்திற்குள் அரசியலமைப்பை நுழைத்திருக்கவேண்டிய அவசியமில்லை! இதை ஏன் நான் இங்கு சுட்டிக்காட்டுகிறேன் என்றுல் — சட்டமா அதிபர் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில் 13000 பயங்கரவாதிகள் சிறைக்குள் வைக்கப்பட்டிருந்ததை இங்கு குறிப்பிட்டதனுலே தான்! அத்தகைய சூழ்நிலையை எப்படி சமாளிப்பதென்பது குறித்து போதியளவு அரசாங்கத்துக்கு புத்திமதி கூறப்பட்டிருக்கவேண்டும்.

நடைமுறையிலிருந்த தனித்தனியான வேறு சில சட்டங்கள் அரசியல் சட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அரசகரும மொழிச்சட்டம், பாராளுமன்ற உறுப்பினர்களுக்குரிய விசேட சலுகைகள் சட்டம், குடியுரிமைச் சட்டம், பொதுத்தேர்தல் சட்டம் ஆகியவற்றை உதாரணமாக இங்கு கூறமுடியும்.

நடைமுறையிலிருக்கும் சட்டங்கள், அரசியல் சட்டத்தின் 18(1) பிரிவுக்கு முரணுனவையாக இருந்தபோதிலும் தொடர்ந்தும் அவை நடைமுறையிலிருக்கும் என்ற பொதுவான விதியொன்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. நடைமுறையிலிருக்கும் சட்டங்களைப் பற்றி கூறவந்த அரசியலமைப்பு சட்டத்தின் 12(1) பிரிவு, இவைபற்றி அரசியலமைப்பில் ஏதாவது திட்டவட்டமாக அறுதியிட்டுக் கூறப்பட்டிருந்தாலொழிய (except as expressly provided in the constitution) அவை நடைமுறையிலிருக்கும் என்று கூறுகிறது.

அரசியலமைப்புத் திட்டத்தை ஆராயும்போது அவசரகாலச் சட்டம் பற்றிக் கூறும் 134(2) பிரிவைத் தவிர வேறு எந்தப் பிரிவிலும் இந்தத் 'திட்டவட்டமாக அறுதியிட்டுக் கூறும் வார்த்தைகள்' பிரயோகிக்கப்பட்டிருப்பதை நாம் காணமுடியாது. இதை நான் இங்கு குறிப்பிடுவதற்குக் காரணம் மேல் நீதிமன்றத்திலும் உயர்நீதிமன்றத்திலும் அரசியல் சட்டத்தின் வாசகங்களுக்கமைய பொதுஜன பாதுகாப்புச்சட்டம் நடைமுறையிலிருக்கும் சட்டமா? அல்லது நடைமுறையில் இல்லாத சட்டமா என்பதிலேதான் நாங்கள் மோதிக்கொண்டு இருக்கிறோம்.

பொதுஜனபாதுகாப்பு சம்பந்தப்பட்ட சட்டம்பற்றி 134வது பகுதியில் மிகவும் தெளிவாக வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது. பல்வேறு முக்கிய விடயங்கள் பற்றியும் கூறிய அரசியல் சட்டம், பொதுஜனபாதுகாப்புச் சட்டத்தை இறுதிப்பகுதியாக எடுத்து அதுபற்றி தனியான ஒரு அதிகாரத்தில் குறிப்பிட்டிருக்கிறது. நாட்டில் ஆயுதம் எடுத்துப்பயங்கரவாதம் நடைபெற்றுக்கொண்டிருந்த ஒரு சூழ்நிலையில் பொதுஜனபாதுகாப்புச் சட்டம் பற்றி தனியாக ஒரேயொரு அத்தியாயத்தில் மட்டும் அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது உற்றுநோக்கத்தக்கது. பொதுஜனபாதுகாப்புச் சட்டத்தையே இல்லாதொழிக்க வேண்டுமென்று கருதியவர்கள் பின்னர் அதை மறுபரிசீலனை செய்திருக்கிறார்கள் என்று நான் கூறினால் அது தவருகுமா?

மக்கள் பிரதிநிதிகளிடம்தான் தேசிய அக்கறையுடைய சகல சட்டங்களையும் ஆக்கும் அதிகாரம் இருக்கவேண்டுமென அரசியல் சட்டத்தை வரைந்தவர்கள் ஆரம்பத்தில் கருதினார்கள். அரசாங்கத்தைக் கவிழ்க்க ஆயுதமேந்திய பயங்கரவாதிகள் முயற்சித்த வேளையிற்தான் அவர்கள் அந்த நிலையிலிருந்து படிப்படியாகத் திரும்பினார்கள். 1971 யூன் மாதம்தான் அவர்கள் தங்கள் சிந்தனையை மாற்றிக்கொண்டு மெல்லமெல்ல பத்தாவது அடிப்படைத் தீர்மானத்தைச் சிதைக்கத்தொடங்கினார்கள்.

சட்டமா அதிபர் தன்னுடைய வாதத்தை மிகவும் கஷ்டப்பட்டு திறமையாக நடத்தினார். ஆனால் எந்தத் திறமையாலும், வியாக்கியானத்தின் அடிப்படைத் தத்துவங்களையும் நோக்கங்களையும் மறைத்துவிடமுடியாது.

அரசியல் சட்டங்களுக்கு சுதந்திரமான வியாக்கியானங்கள் தரப்படவேண்டுமென சட்டமா அதிபர் இங்கு கூறினார். இந்த தவிர்க்கப்படமுடியாத விதிவிலக்கு, எங்களில் சிலர் அபிமானம் வைத்திருக்கும் சமஷ்டி அரசியல் திட்டங்களுக்கே பிரயோகிக்கப்படக்கூடியதாகும். எப்படியிருந்த போதிலும், ஒருநாட்டின் அரசியல் சட்டம் செயற்படக்கூடியதாக இருக்கவேண்டும்.

ஓர் அமைச்சர் நல்லநோக்கத்துடனும் விசுவாசத்துடனும் சில திட்டங்களை வெளியிடுவதுண்டு. ஆனால் அவை இறுதிவடிவம்பெற்று அமுலாகும்போது ஆரம்பத்தில் வெளியிடப்பட்ட திட்டம் போல இருக்காது. சபையில் தாம் அளிக்கும் வாக்குறுதிகளுக்கு விரோதமாக அமைச்சர்கள் செயற்படுவதுண்டு.

பிரதம நீதியரசர்: நீரும் ஒரு அமைச்சராக இருந்ததனால், உமது இக்கருத்தை ஏற்கிறோம்.

பொன்னம்பலம்: நான் அம்மாதிரியான சட்டங்களுக்கு பொறுப்பாக இருந்ததில்லை!

## ஐ.நா.சபையில்...

—1-ம் பக்கத் தொடர்

கொண்டார். லண்டன் ஈழத் தமிழர் கழகத்தில் அமெரிக்கப்!பிரதிநிதியான கம்ப்யூட்டர் நிபுணர் திரு. இராமநாதனும் கலந்துகொண்டார்.

கனடாவில் டொரண்டோ, மான்ரியில் வாழும் ஈழத் தமிழ் இயக்கத்தினர் நடத்திய கூட்டங்களிலும் டாக்டர் சனர்த்தனம் உரையாற்றினர்.

தமது பாரிஸ் பயணத்தின் போதும், டாக்டர் சனாத்தனம் அங்குள்ள ஈழத்தமிழ் இளைஞர்களைச் சந்தித்துப் பேசினர்! சித்தே பல்கலைக் கழக வளாகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய ஜனர்த்தனம், உலகத்தமிழனே ஒன்றுபடு, ஈழத் தமிழனுக்காக குரல்கொடு என்ற முழக்கத்தை உலகெங்கும் பரப்பவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். 'லண்டன் முரசு' வளர்ச்சிக்கென நடைபெற்ற திரைப்படக்காட்சிகளிலும் கலந்து உரையாடினர்.

டாக்டர் சனர்த்தனம் நடிக்கும் "மீண்டும் இலங்கையெரிகிறது" என்ற பிரசார நாடகம் 22-10-76ல் லண்டன் விம்பிள்டன் நகர மண்டபத்தில் மேடையேறுகிறது.

## இரு புதிய மொழிவழித் தொழிற்சங்கம்
### அங்குரார்ப்பணம்

எதிர்வரும் 23-10-76 சனிக்கிழமை காங்கேசன் துறை பட்டினசபை மண்டபத்தில் இரு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இந்த இரு நிகழ்ச்சிகளிலும் மூதறிஞர் தந்தை செல்வா நாவலர் அ. அமிர்தலிங்கம், உடுப்பிட்டி சிவா ஆகியோர் பங்குபற்றுகின்றனர்.

அன்று காலை 9 மணிக்கு மொழிவழித் தொழிற்சங்கமான புகையிரதப்பகுதி ஊழியர் சங்கக்கிளை அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெறுகிறது.

மாலை 5 மணிக்கு காங்கேசன்துறை சீமெந்து தொழிலாளர்சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெறுகிறது.

# "சமதர்ம தமிழ் சமுதாயத்தை உருவாக்கவும் தமிழ்ஈழத்தின் ஆட்சி தமிழன கையில் வரவேண்டும்!

## குண்டசாலையிலும் கொள்கை முழக்கம்!

**மாமேதை லெனின், கார்ல் மார்க்ஸ், போன்ற சோசலிசமேதைகளின் வழியில் நின்று, ஒரு சோசலிச சமுதாயமாக விரைந்து தன்னை ஆக்கிக் கொள்ளும் பரிபக்குவமும் வாய்ப்பு சிங்கள நாட்டைவிட, தமிழ் ஈழத்துக்கே அதிகமாக உண்டு. தமிழ் ஈழம் ஒருசோசலிச நாடாக அமைவதற்குக்கூட தமிழ் ஈழத்தினுடைய ஆட்சி தமிழன் கையில் வரவேண்டும். ஆட்சி அதிகாரம் நமது கையிலிருந்தால் மட்டுமே நாம் விரும்பும் சோசலிசப் புரட்சியை தமிழ் ஈழத்தில் கொண்டுவரமுடியும்!"**

—இவ்வாறு குண்டசாலை தமிழ இளைஞர் பேரவைக் கிளைத் தலைவர் திரு. த. ம. தேவேந்திரன் தலைமையில் குண்டசாலையில் 17-10-76ல் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் பேசிய சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசன் குறிப்பிட்டார். பேராதனைவளாகத் தமிழ் மாணவர்கள் ஏராளமானோர் கலந்துகொண்ட இக்கருத்தரங்கில் திரு. கோவை மகேசன் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது.

"தமிழினம் இன்று தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறது. தன்னுடைய சொந்தமண்ணை சுதந்திர பூமியாக்குவதற்காக— அந்நிய சிங்கள ஏகாதிபத்தியத்தையும், சுரண்டலையும் சிங்கள காலனித்துவத்தையும் எதிர்த்துப்போராடி வருகிறது. தமிழினம நடத்துகின்ற இந்தத்தேசிய விடுதலைப் போராட்டம் சோசலிச தத்துவங்களுக்கு முரண்பட்டதல்ல; கார்ல் மார்க்ஸ், லனின், ஸ்டாலின் மாசேதுங் போன்ற சோசலிச மேதைகளின் சித்தாந்தங்களுக்கு கிஞ்சிற்றும் முரண்பாடின்றிய தமிழீழ விடுதலைப் போராடடம் நடைபெற்று வருகிறது.

"தமிழீழத்துக்குப் போராடும் நம்மை முதலாளிகள், பிற்போக்குவாதிகள் என்றெல்லாம் ஈனத்தனமாகத் தாக்கும் 'முற்போக்கு வாதிகள்' என்று தம்மை அழைத்துக்கொள்வோர் — சிங்களவர்களின் ஆக்கிரமிப்புத் தேசியத்துக்கும், சிங்கள ஏகாதிபத்தியத்துக்கும் குற்றேவல் செய்யும அடிமைகளாகக்காட்சி தருகிருர்கள். இங்கிலாந்திலிருந்து அயர்லாந்து பிரிவதை ஆரம்பத்தில் ஏற்க மறுத்த கார்ல் மார்க்ஸ், இறுதியில் பிரிவினையைத் தவிர வேறு வழியில்லையென்ற முடிவுக்கு வந்து, அதை ஏங்கெல்சுக்கு எழுதினர். அதேபோல தமிழ்ஈழப் பிரிவினை தவிர்க்க முடியாதது என்பதை இங்கும் உண்மையான சோசலிசவாதிகள் எவராவது இருந்தால் நிச்சயம் ஏற்றுக் கொள்வார்கள்.

"தமிழீழத்துக்கு போராடும் எங்கள் அணியிலே — இன்றைக்கு சிறையிலே தம்மை அழித்துக்கொண்டிருக்கும் தமிழ் இளைஞர் அணியிலே — 'முதலாளி' என்று சொல்வதற்கு எவனும் கிடையாது; இருப்பதற்கு குடிசைகூட இல்லாத ஏழைகள், நடுத்தர இளைஞர்கள் தாம் இன்றைகது இந்த இயக்கத்தை முன்னெடுத்துச் செல்கிருர்கள். நிச்சயமாக மலரும் தமிழீழம், ஒரு முதலாளித்துவநாடாகஇருக்காது; அது ஏழையென்றும் அடிமையென்றும எவனுமற்ற—சாதி பேதம் அற்ற— சுரண்டலற்ற—வர்க்க பேதமற்ற ஒரு சமதர்ம பூமியாகவே இருக்கும்!

"எனவே தமிழீழத்தை சிங்கள ஏகாதிபத்தியத்திலிருந்து மீட்டு ஆங்கு சோசலிச சமுதாயததை கட்டியெழுப்புவதற்காக நடைபெறும இததேசிய விடுதலைப் போராட்டத்தில் தததுவார்த்த முரண்பாடுகளை ஒதுக்கிவைத்துவிட்டு விடுதலையை நேசிககும் அனைவரும் குதிககவேண்டும்."

திரு. ஈழவேந்தன் பேசுகையில் கூறியதாவது:-

"தமழன் தன்னிலை குலைந்ததற்கும், தாழ்ந்ததற்கும் காரணம வரலாற்றை மறந்ததுதான. வடக்கையும கிழக்கையும், மேற்கே புத்தளம் வரை — தமிழன் கட்டியாண்டான் என்பதற்கு ஆதாரமாக ஏராளமான வரலாற்றுக் குறிப்புக்கள் உணடு. துட்டகைமுனு கூட 32 தமிழ் அரசர்களைப் போரிட்டுத்தான் வெற்றிவாகை சூடியதாக மகாவம்சம பேசுகிறது. எனவே துட்டகைமுனு காலத்திலேயே 32தமிழ் அரசர்கள் இந்நாட்டை ஆண்டார்கள் என்பதை சிங்களவர் நூலான மகாவம்சமே ஒப்புக் கொள்ளுகிறது.

"1799ம் ஆண்டின் கிளகோர்ன் குறிப்பும், 1803ம் ஆண்டின் அரோசிமித் தேசப்படமும், தமிழ் மக்கள் தனித்தேசிய இனமாகத் தம்மைத்தாமே ஆண்டதை எடுத்துக்காட்டுகின்றன இழந்த இந்த அரசை மீட்பதற்குத்தான் இன்றைகது தமிழினம் போராடி வருகிறது. மாவோ கூறியது போல—சொநத நாடு சுதந்திரமற்றுக்கிடக்கும் நிலையில் சோசலிசத்தைப்பற்றிச் சிந்திப்பதற்கே இடமில்லை. முதலிலவேண்டியது சுதந்திரம்; சுதந்திரத்துக்கு அடுத்தது தான் ஏனையவை.

தமிழ் ஈழம் அமைத்தேயாகவேண்டிய நிலைக்கு நாம தள்ளப்பட்டாலும் — அல்லது தள்ளப்படாவிட்டாலும் சுதந்திரம் நம் பிறபபுரிமை என்ற உணாவுடன்; சுதந்திரப் போராட்டத்தில் அனைவரும் பங்குபெற வேண்டும்?"

தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக்கிளைத் தலைவர் ஆ. ரகுபதிபாலசிறீதரன் பேசுகையில் — அஞ்சி அஞ்சி சாவதில் பிரயோசனமில்லை; ஆறிலும் சாவு நூறிலும் சாவு. எனவே நாம ஒரு முடிவுக்கு வந்து இன்றைக்கு களத்தில் குதித்துள்ளோம். தமிழ்ஈழம் முடிந்த முடிவாகிவிட்டது. இந்த விடுதலைப் போராட்டத்தில் அனைவரும் பங்காளர்களாக வேண்டும். இளைஞர் பேரவைக் கிளைகளை நாடெங்கும் அமைத்து இயக்க அமைப்பைப் பலப்படுத்தவேண்டும் என்று கூறினர்.

## விமர்சனக் கருத்தரங்கு

குண்டசாலை விவசாயக் கல்லூரி மண்டபத்தில் காவலூர் எஸ். ஜெகநாதன் எழுதிய "சொந்தங்கள் தொடர்கின்றன" எனும் நூலின் விமர்சனக் கருத்தரங்கு ஒன்றும் 17-10-76ல இடம்பெற்றது. இதை விரிவுரையாளர் திரு. பேரின்பநாயகம் குத்துவிளக்கேற்றித் தொடக்கிவைத்தார். இவ்விமர்சனக் கருத்தரங்கிலும் திருவாளர்கள் கோவை மகேசன், ஈழவேந்தன், இரகுபதிபாலசிறீதரன் ஆகியோர் பங்குபற்றி உரையாற்றினர். (பேச்சு விபரம் பின்னர் வெளிவரும்) இந்த ஆய்வரங்கில் திருவாளர்கள் திருமலை நவம், ஆதவன், குகதாசன், புலவர் பார்வதி நாதசிவம், விரிவுரையாளர் அருணசலம் பிள்ளை, ஆகியோருட்படபலர் உரையாற்றினர்.

## காங்கேசன்துறையில் இளைஞர் பேரவை கருத்தரங்கு!

தமிழ் இளைஞர் பேரவையின் காங்கேசன் துறைக் கிளையின் ஆதரவில் கருத்தரங்கு ஒன்று 23.10.76சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு காங்கேசன்துறை தமிழர் விடுதலைக் கூட்டணி கிளை அலுவலகத்தில் நடைபெறுகிறது. இக் கருத்தரங்கில் உடுப்பிட்டி சிவாவும் நாவலர் அமிர்தலிங்கமும் உரையாற்றுகின்றனர்.

"மில்க்வைற்"

25 சதம் துண்டு சோப் வாங்கி
அதிக லாபம் அடையுங்கள்.

மில்க்வைற் சவற்காரத்
தொழிலகம் யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1976ம் வருடம் ஒக்டோபர் மாதம் 20ந் திகதி புதன்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org